**வலப்பனை பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 12 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலப்பனை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் மொத்த மூலதன செலவினம் ரூபா 25,007,161 ஆக இருந்த போதிலும் அதன் பெறுமதி ரூபா 21,730,101 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,386,246 பெறுமதியான இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன வளங்கல் மற்றும் உபகரணத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (iii) | மீளாய்வாண்டில் ஏக்கர் வரி வருமானமான ரூபா 49,256 தொகை வருமான செலவினக் கணக்கில் செலவு வைக்கப்படவில்லை. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 06 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 149,890 தொகை மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் பெறவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | 2016 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 537,877 பெறுமதியான 190 கூட்டுப் பசளைப் பாத்திரங்கள் அலுவலக உபகரணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதை திருத்தும் போது மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கிற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | முன்னைய ஆண்டின் போது களஞ்சியத்தில் இருந்து அகற்றப்பட்ட ரூபா 1.814,164 தொகை கணக்குகளில் இருந்து அகற்றப்படும் போது திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருநதது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (vii) | 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட இரண்டு நிர்மாண வேலைகளுக்குரியதாக கணக்கு வைக்கப்படாத பெறவேண்டிய மூலதன மானியம் ரூபா 290,000 தொகை நாட்குறிப்பு இல. 39 இன் மூலம் ரூபா 580,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

**(ஆ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட வைப்புப் பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 1,428,831 தொகையான 04 வைப்பு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2013 ஆம் ஆண்டின் பின்னர் பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணிச் செல்வதுடன் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் மீதிகளை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## (இ) பெற வேண்டிய கணக்குகள் பற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### (i) பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,688,058 ஆகும். | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கும், பிழையான மீதிகள் காணப்படுமாயின் அதனைக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த பணத்தை அறவிடுவதற்கு 2019.12.31 அதன் திகதிக்கு முன்னர் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### (ii) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 7,518,946 ஆகும். | செலுத்த வேண்டிய மீதியைச் செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வேலைகளுக்கான பணத்தைப் பெறும் முறையில் மேற்கொள்ளப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 126(III) ஆம் உப பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தொலைத்தொடர்பு கோபுரங்களில் இருந்து உப விதிகளை விதித்து அதன் வருமானமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏனைய தேவையான ஏற்பாடுகளை விதித்துக் கொள்வதற்கான இயலுமை தொடர்பிலும் | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் போது வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | சபையில் சேவையாற்றி சேவையை விட்டு சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்த 12 உத்தியோகத்தர்கள் / ஊழியர்களிடமிருந்து 2018.12.31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 134,595 ஆகும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் பணம் அறவிடப்பட வேண்டும் | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடின்கை எடுக்கப்படும் |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 08 வாகனங்கள் சுற்றறிக்கை அறிவுரையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும் | விரைவாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். |
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதனவரி ஆதனங்கள் 2011 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்படவில்லை. | சுற்றறிக்கையில் காண்பிக்கப்படுகின்ற முறையில் ஆதனவரி மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். | மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் அறிவிக்கப்படும். |
| (உ) | 2010.05.05 ஆந் திகதிய 04/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | நாளாந்தம் சம்பளம் செலுத்தும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இரண்டு ஊழியர்களுக்காக 2018 ஏப்ரல் முதல் நவம்பர் வரையான காலத்திற்கு அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும். | இந்த ஊழியர்கள் நாளொன்றிற்கு ரூபா 1,200 தொகை செலுத்தும் அடிப்படையில் சேர்க்கப்பட்டமையால் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,776,520 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,962,980 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,004,754 | 2,024,849 | 1,423,662 | 1,688,108 | 2,312,974 | 2,449,170 | 1,851,807 | 1,517,888 |
| (ii) | வாடகை | 5,896,410 | 4,949,690 | 4,424,978 | 3,487,067 | 6,128,000 | 4,617,855 | 3,976,260 | 3,142,146 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,615,000 | 3,487,058 | 3,487,058 | - | 3,404,000 | 3,588,348 | 3,588,348 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 7,197,639 | 5,279,508 | 5,235,658 | 224,895 | 6,491,000 | 7,306,295 | 4,659,530 | 3,549,712 |
| | | 18,713,803 | 15,741,105 | 14,571,356 | 224,895 | 18,335,974 | 17,961,668 | 14,075,945 | 3,549,712 |

#### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு எடுத்திருந்த 05 வாடகையாளர்கள் 12 மாதங்கள் முதல் 71 மாதங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து வாடகை செலுத்தாது புறக்கணித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிலுவை ரூபா 691,060 ஆகும். | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். | கடைகளின் உரித்தை கையேற்பதற்காக சபைக்கு உரித்துறுதி காணப்பட்டாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் வருமானம் பரிசோதகர் இல்லாதிருந்தமை வருமானங்களை அறவிடுதல் குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது. எனினும் ஏனைய நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

#### (அ) நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 226,117 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 3,529,900 முத்திரைக் கட்டணம் மீதி என்பன காணப்பட்டன. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3.4 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 29,975 தொகை அறவிடுவதற்கு இருந்தது. | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக ஆராய்ந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தும்பேகெலே கழிவுப் பொருள் நிலையத்தில் முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டமொன்று | கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி பெற்று உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் கூட்டுப் பசளை தளம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் இந்த |

| | | |
|---|---|---|
| அமுல்படுத்தப்படவில்லை. | | பிரச்சினையை 2019 ஆம் ஆண்டில் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் தொடர்பாக பிரதேச சபைபோதியளவில் அறிந்திராதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக குறித்த பணிகள் நிறைவேற்றப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகளை அடைத்து கொள்வதற்கு திட்டமிடப்பட வேண்டும். | இது தொடர்பாக விஷேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வலப்பனை பொதுச் சந்தையில் அமைந்துள்ள 16 கடைகளுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தால் 2017.01.01 முதல் அமுலாகும் வகையில் புதிய மதிப்பீட்டு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் புதிய மதிப்பீடு 2019.01.01 ஆந் திகதி முதல் அமுலாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டமையின் காரணமாக சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 572,400 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கும் போது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சிட்டையிட்டு வைத்தல் மற்றும் வாடகையாளர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதிலுள்ள வசதியீனத்தின் அடிப்படையில் 2019.01.01 முதல் அமுல்படுத்துவதற்கு திருத்தங்களைச் செய்யுமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான கெப் வண்டிக்காக 2007 பெப்ரவரி 07 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 23 ஆந் திகதி வரையான 11 வருட காலப்பகுதியில் வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாமையின் காரணமாக ரூபா 25,545 தொகையான தண்டப் பணமும் செலுத்தியிருந்த போதிலும் கெப் வண்டியை பயன்பாட்டிற்கு எடுக்காமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உரிய கெப் வண்டியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனம் ஓட்ட நிலையில் காணப்படுவதுடன் 05 வருடங்களுக்கு மேல் வருமான அனுமதிப்பத்திரம் பெறாதிருந்தால் வாகனங்களின் பதிவு செல்லுபடியற்றதாகும் என அறிவிக்கப்பட்டமையின் காரணமாக தண்டப் பணத்தைச் செலுத்தி வருமான அனுமதிப் பத்திரம் பெறப்படும். |

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 16 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக 2,115,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை தாமதமின்றி அமுல்படுத்துதல் வேண்டும். | சில செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கான காலம் போதியளவில் இல்லாதிருந்தமையால் எந்தவொரு ஒப்பந்தகாரரும் முன்வராமையின் அடிப்படையில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை விஞ்சிக் காணப்பட்ட 05 செலவின விடயங்களுக்காக பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 14 இன் பிரகாரம் குறைநிரப்பு செலவின மதிப்பீட்டை அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை விஞ்சும் போது விதியின் பிரகாரம் குறைநிரப்பு செலவின மதிப்பீடு அங்கீகரித்துக்கொள்ளப்பட வேண்டும். | குறைநிரப்பு செலவின மதிப்பீட்டைத் தயாரிக்காமல் செலவின பேரேடு மாற்றப்பட்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193 இன் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே ஏற்பட்டிருந்த வேறுபாடுகள் தொடர்பான விடயங்களை விளக்கும் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதியின் போது இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |